எண்.01/தொ.து/ஜி/2020
தொழிலாளர் துறை
புதுவை அரசு
...

புதுச்சேரி, தேதி 23-03-2020

## பத்திரிக்கை செய்தி

கொரோனா கிருமி (COVID-19) வேகமாக பரவிவரும் சூழ்நிலையை சமாளிக்கும் பொருட்டு, இந்திய அரசு, தேசிய பேரிடராக அறிவித்துள்ளது. இந்தக் கிருமி நாசினி, பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து வேகமாக பரவுகிறது. எனவே, இந்தக் கிருமி பரவுவதை தடுக்கும் பொருட்டு சமூக நடவடிக்கைகளிலிருந்து விலகி இருப்பதும், கூட்டமாக சேர்வதற்கான நிகழ்வுகள் ஏற்படாமல் இருப்பதற்கும், பரிந்துரைக்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதாலும் COVID-19 கிருமி பரவுவதை தடுத்து நிறுத்த இயலும். எனவே, புதுச்சேரி மாநிலத்திலுள்ள அனைத்து தொழில்முனைவோர்களும் தங்களிடம் பணிபுரியும் பணியாளர்கள்/தொழிலாளர்களை COVID-19 கிருமியிடமிருந்து பாதுகாக்க பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(1) வெப்பக்கதிர் பரிசோதனை இயந்திரத்தினை தொழிற்சாலையின் நுழைவு வாயிலில் பொருத்தியிருக்க வேண்டும்.

(2) செய்யவேண்டியவையும், செய்யக்கூடாதவையும் தகவல்களை கையேடு, சுவரொட்டி மற்றும் பதாகைகள் மூலமாக காட்சிக்கு வைக்கப்படவேண்டும்.

(3) அடுத்த அறிவிப்பு வரும்வரை பயோ மெட்ரிக் வருகை பதிவேடு நிறுத்தப்படவேண்டும்.

(4) தொழிற்சாலையில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கை உறைகள், சோப்பு, சுத்தமான தண்ணீர் மற்றும் கை கழுவும் இடம் அனைத்தும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(5) சானிடைசர்கள் கூடுதலாக தொழிற்சாலை நுழைவிடத்தில் வைத்திருக்க வேண்டும்.

(6) இயந்திரங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு தொழிற்சாலையில் பொருத்துவதற்கு முன்னதாக கிருமிநாசினி தெளிக்கப்பட வேண்டும்.

(7) பணியாளர்களை புதுச்சேரிக்கு வெளியே அனுப்புவதை தவிர்க்கவும். அதே போன்று வெளியில் இருந்து பணியாளர்கள் புதுச்சேரிக்கு பணிநிமித்தமாகவோ பார்வையாளராகவோ வருவதையும் தவிர்க்க வேண்டும்.

(8) பணியாளர்கள்/தொழிலாளர்கள் தங்கள் வீட்டிலிருந்தே பணிகளை செய்வதற்கான வாய்ப்பு குறித்து ஆராய வேண்டும்.

(9) தொழிற்சாலை வளாகத்திற்குள் தொழிலாளர்கள் திரண்டு இருப்பதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

(10) தொழிற்சாலையில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் ரத்து செய்யவேண்டும்

..2

(11) தொழிற்சாலையிலுள்ள சிற்றுண்டி அருந்தும் இடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்களில் முறையாக கிருமி நாசினியை அடிக்கடி தெளிக்கவேண்டும்.

(12) காய்ச்சல் மற்றும் நுரையீரல் பிரச்சனைகளுடன் உள்ள பணியாளர்களுக்கு விடுப்பு மறுக்கக் கூடாது. அப்படிப்பட்ட பணியாளர்களை அருகிலுள்ள சுகாதார மையத்திற்கு சிகிச்சைக்கு அனுப்பப்படவேண்டும்.

(13) தொழிலகத்தில் அதிகமான நபர்களுக்கு காய்ச்சல் மற்றும் நுரையீரல் பிரச்சனைக் காணப்படின் உடனடியாக மேல்நடவடிக்கைக்கு தொழிலாளர் துறையை அணுகவேண்டும்.

(14) முகவுறை மற்றும் கை உறைகள் பணியிலுள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

(15) அடிக்கடி சுத்தப்படுத்துவதையும் தொடர்ந்து சுகாதாரமாக பணியிடங்களை வைத்திருபதையும் குறிப்பாக தொடும் இடங்களையும் சுத்தம் செய்யப்படுவதையும் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

(16) தொழிலாளர்கள் தங்களுடைய உடல்நலத்தை பேணிக் கொள்ளவேண்டும். அவர்கள் சுகவீனமாக இருப்பதாக உணர்ந்தால் தங்களுடைய அதிகாரியிடம் தகவல் தெரிவித்துவிட்டு பணியிடங்களில் இருந்து வெளியேறவேண்டும். அவர்கள் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை வெளியீட்டுள்ள வழிகாட்டுதலின்படி தங்களை தனிமைபடுத்திக் கொள்ளவேண்டும்.

(17) மேலும், வயது முதிர்ந்தோர், கர்ப்பிணி பணியாளர்கள் மற்றும் மருத்துவ சிகிச்சையிலிருக்கும் பணியாளர்கள் கூடுதல் கவனத்தோடும் முன்னெச்சரிக்கையோடும் பணிபுரிய அறிவுறுத்தவேண்டும். இவர்கள் பொதுமக்களுடன் நேரடி தொடர்புடைய பணிகளில் ஈடுத்தக்கூடாது.

(18) தொழிற்சாலையில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை பணியமர்த்த நிர்வாகம் முடிவு செய்தால் அவர்களுக்கு கொரோனா நோய் அறிகுறி இல்லை என்பதை சுகாதார பரிசோதனை மூலம் உறுதிப்படுத்திக் கொண்டு அவர்களை பணியமர்த்த வேண்டும்.

(19) அவசர மருத்துவ சேவைக்கு உடனடியாக 104 தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளவேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளை கடைகள் / நிறுவனங்கள் / தொழிற்சாலைகள் முழுமையாகவும் மற்றும் கண்டிப்பாகவும் இதுசம்பந்தமான அறிக்கையினை தொழிலாளர் துறைக்கு உடனடியாக அளிக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**(இ. வல்லவன், இ.ஆ.ப)**
**அரசு செயலர் (தொழிலாளர்)**

பெறுதல்
சம்பந்தப்பட்டவர்கள்